# October 16, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. 2030 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை அகமதாபாதில் நடத்த, போட்டியின் நிர்வாகக் குழு பரிந்துரைத்தது.
2. தென்கிழக்கு ஆப்பிரிக்க நாடான மடகாஸ்கரில் அதிபர் ஆண்ட்ரி ரஜோலினாவின் அரசைக் கவிழ்த்துவிட்டு ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.
   i. இந்த ஆட்சிக் கவிழ்ப்பை வழிநடத்திய தளபதி மைக்கேல் ராண்ட்ரியானிரினா, புதிய அதிபராகப் பொறுப்பேற்கவிருப்பதாக அறிவித்தார்.
   ii. இளைஞர்களின் தீவிரபோராட்டங்களைத் தொடர்ந்து ஆண்ட்ரி ரஜோலினாவை அதிபர் பதவியில் இருந்து அகற்றிய ராண்ட்ரியானிரினா, இன்னும் சில நாள்களில் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ரஜோலினா நாட்டை விட்டு தப்பியுள்ளார்.
   iii. 1960-இல் பிரான்ஸிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின், மடகாஸ்கர் பல ஆட்சிக் கவிழ்ப்புகளைச் சந்தித்துள்ளது நினைவுகூரத்தக்கது.
3. ரஷிய அதிபர் விளாதிமீர் புதினை சிரியாவின் இடைக்கால அதிபர் அல்- ஷாரா மாஸ்கோவில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார்.
   i. ரஷிய ஆதரவுடன் சிரியாவில் நீண்ட காலம் ஆட்சி செலுத்திவந்த அல்-அஸாதை கடந்த ஆண்டு திடீர் தாக்குதல் மூலம் அகற்றிய கிளர்ச்சிப் படையின் தலைவரான அல்-ஷாரா, உள்நாட்டுப் போரின்போது எதிரெதிராகச் சண்டையிட்டிருந்தாலும், ரஷியாவுடன் நல்லுறவைப் பேண விரும்புகிறார்.
   ii. ரஷியாவும், சிரியாவில் உள்ள தங்களது ராணுவ நிலைகளைத் தக்கவைக்க விரும்புகிறது. இந்த விவகாரங்கள் தொடர்பாக இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தியதாகக் கூறப்படுகிறது.
4. வளிமண்டலத்தில் உள்ள கரியமில வாயுவின் அளவு கடந்த 2024-ஆம் ஆண்டில் புதிய உச்சத்தை எட்டியதாக ஐ.நா. வானிலை அமைப்பான உலக வானிலை அமைப்பு (டபிள்யு எம்ஓ) தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
   i. கடந்த 2024-ஆம் ஆண்டில் வளிமண்டலத்தில் காணப்பட்ட கரியமில வாயுவின் அளவு, 1957-இல் அளவீடு தொடங்கியதற்குப் பிந்தைய அதிகபட்சத்தைத் தொட்டது.
   ii. அந்த பசுமைக் குடில் வாயுவால் கிரகிக்கப்பட்ட சூரியனின் சூடு புவியை மேலும் வெப்பமாக்கியதால் பருவநிலை மாற்றம் உருவாகி, அதிகப்படியான இயற்கைப் பேரிடர்களை ஏற்படுத்தியது.
   iii. 1960-ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வளிமண்டலத்தில் உள்ள கரியமில வாயுவின் உயர்வு விகிதம் தற்போது மூன்று மடங்காகியுள்ளது. மனிதர்களின் செயல்பாடுகள் மட்டுமன்றி வழக்கத் தைவிட அதிகமாக உலகின் பல்வேறு பகுதிகளில் பரவிய காட்டுத்தீயும் நிலைமையை மோசமாக்கியது.
   iv. எனவே, உலக நாடுகள் கரியமில வாயு உமிழ்வைக் குறைப்பது காலநிலைக்கு மட்டுமன்றி, பொருளாதார பாதுகாப்பு மற்றும் சமூக நலனுக்கும் மிகவும் அவசியம்.
   v. கடந்த 2024-ஆம் ஆண்டில் கரியமில வாயு மட்டுமன்றி மீத்தேன், நைட்ரஸ் ஆக்ஸைடு போன்ற பிற பசுமைக் குடில் வாயுக்களும் உச்ச அளவை எட்டின என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
5. ஆப்கன் தலிபான்களுடன் 48 மணி நேர போர் நிறுத்தம் மேற்கொள்வதாக பாகிஸ்தான் அறிவித்தது. இது குறித்து அந்த நாட்டு வெளியுறவுத் துறை அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

i. எல்லையில் தற்காலிக போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க பாகிஸ்தான் அரசும் ஆப்கானிஸ்தானின் தலிபான் அரசும் முடிவு செய்துள்ளன.
ii. புதன்கிழமை மாலை 6 மணிக்குத் தொடங்கி 48 மணி நேரத்துக்கு இந்தப் போர் நிறுத்தம் நீடிக்கும். தலிபானிடமிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. தேசிய விளையாட்டு நிர்வாகச் சட்டம் 2025-இன் கீழ், புதிதாக அமையவுள்ள தேசிய விளையாட்டுகள் வாரியம் (என்எஸ்பி), தேசிய விளையாட்டுகள் தீர்ப்பாயம் (என்எஸ்டி), தேசிய விளையாட்டுகள் தேர்தல் குழு (என்எஸ்இபி) ஆகியவற்றுக்கான வரைவு விதிகளை மத்திய அரசு வகுத்துள்ளது.

i. இதுதொடர்பாக பொதுமக்களின் கருத்துகளை கோரி அமைச்சகத்தின் வலைதளத்தில் அந்த விதிகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு:
ii. தேசிய விளையாட்டுகள் வாரியம்: இந்த வாரியம், ஒரு தலைவர், இரு உறுப்பினர்கள் என 3 நபர்களைக் கொண்டதாக இருக்கும். பொது மற்றும் விளையாட்டு நிர்வாகத்தில் போதுமான அறிவு அல்லது அனுபவம் கொண்டவர்களாக அவர்கள் இருப்பார்கள். விளையாட்டுச் சட்டங்கள் மற்றும் துறை சார்ந்த இதர விவகாரங்களிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பார்கள்.
iii. இவர்களுக்கான வயது வரம்பு 65. பதவிக்காலம் 3 ஆண்டுகள். இதில் எது முன்கூட்டியே வருகிறதோ, அத்துடன் அவர்களின் பதவிக்காலம் நிறைவடையும். ஒரு முறை நியமிக்கப்பட்ட வருக்கு மேலும் 3 ஆண்டுகள் நீட்டிப்பு வழங்கப்படலாம். வாரியத்தில் அங்கம் வகிப்போர், அந்த காலகட்டத்தில் துறை சார்ந்த வேறுஎந்தவொரு பதவியும் வகிக்கக்கூடாது.
iv. வாரியத்தின் வரவு, செலவுக் கணக்குகளை நிதியாண்டு நிறை வடைந்து 3 மாதங்களுக்குள்ளாக மத்திய தலைமை கணக்குத் தணிக்கை அதிகாரிக்கோ அல்லது அவரால் நியமிக்கப்படும் நபருக்கோ அனுப்பிவைக்க வேண்டும்.
v. இந்த வாரியத்துக்கான நியமனங்களை, தேடுதல் - தேர்வுக்குழு மேற்கொள்ளும். அமைச்சரவைச் செயலர் தலைமையிலான அந்தக் குழுவில், விளையாட்டுத் துறைச் செயலர், துறை சார்ந்த நிர்வாக அனுபவமிக்க ஒருவர், தேசிய விளையாட்டு விருதுகள் பெற்ற இருவர் அங்கம் வகிப்பர்.
vi. தேசிய விளையாட்டுகள் தீர்ப்பாயம்: இந்தத் தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களுக்கான பதவிக்காலம் 4 ஆண்டுகள். அதிகபட்ச வயது வரம்பு 67. இதில் எது முன்கூடியே வருகிறதோ, அத்துடன் அவரின் பதவிக்காலம் நிறைவடையும். வீரர், வீராங்கனைகள், சம்மேளனங்கள் இடையேயான சச்சரவுகளுக்கு தீர்வு காண்பதாக இந்தத் தீர்ப்பாயம் இருக்கும்.
vii. தேசிய விளையாட்டுகள் தேர்தல் குழு: தேசிய விளையாட்டுகள் சம்மேளனங்களின் தேர்தல்களை நடத்தும் இந்தக் குழுவில், குறைந்தபட்சம் 20 உறுப்பினர்கள் எப்போதும் இருப்பர்.
viii. நிர்வாகத்தில் வீரர், வீராங்கனைகள்: ஒவ்வொரு சம்மேளனத்தின் பொதுக் குழுவிலும் 4 அல்லது அதிகமான எண்ணிக்கையில் முன்னாள் வீரர், வீராங்கனைகள் அங்கம் வகிக்க வேண்டும். அவர்கள் தேர்தல் மூலமாகவோ, நியமனங்கள் வாயிலாகவோ தேர்வாகலாம்.
ix. சம்பந்தப்பட்ட வீரர், வீராங்கனைகள் தாங்கள் சார்ந்த விளையாட்டிலிருந்து ஓய்வுபெற்று ஓராண்டுக்குப் பிறகே நிர்வாக பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
x. ஒலிம்பிக் பதக்கம் வென்றவரோ அல்லது குறைந்தபட்சம் ஒரு ஒலிம்பிக்

போட்டியிலாவது பங்கேற்றவரோ மட்டுமே தேசிய ஒலிம்பிக் கமிட்டியில் சேர்க்கப்படலாம். தேசிய விளையாட்டு விருது அல்லது உலக சாம்பியன்ஷிப்பில் பதக்கம் வென்றிருந்தா லேயே ஒருவர் சம்மேளனத்தில் சேர்க்கப்படலாம்.

7. ஐ.நா.மனித உரிமைகள் கவுன்சிலின் (யுஎன்ஹெச் ஆர்சி) உறுப்பினராக இந்தியா ஏழாவது முறையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
   i. 2026-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதிமுதல் மூன்று ஆண்டுகளுக்கு மீண்டும் அதன் உறுப்பினராக இந்தியா தேர்வு செய்யப்பட்டுள்ளது.
   ii. உலகம் முழுவதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பாகச் செயல்பட்டுவரும் யுஎன்ஹெச்ஆர்சி, 47 நாடுகளை உறுப்பினர்களைக் கொண்டது. இதன் உறுப்பினர்கள் ஐ.நா. பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சமமான புவியியல் பகிர்ந்தளிப்பு விதிகளின்படி 5 பிராந்திய குழுக்களுக்கு இந்த 47 இடங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அதன்படி, ஆப்பிரிக்க நாடுகளுக்கு 13 இடங்கள், ஆசிய-பசிபிக் நாடுகளுக்கு 13 இடங்கள், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு 6 இடங்கள், லத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் நாடுகளுக்கு 8 இடங்கள், மேற்கு ஐரோப்பா மற்றும் பிறநாடுகளுக்கு ஏழு இடங்கள் எனப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.
   iii. யுஎன்ஹெச்ஆர்சி தொடங்கப்பட்ட 2006-ஆம் ஆண்டுமுதல் அதன் உறுப்பினராக இந்தியா இருந்து வருகிறது. தொடர்ந்து மூன்று முறை உறுப்பினராக இருக் கக்கூடாது என்ற விதியின்படி 2011, 2018 மற்றும் 2025 ஆகிய மூன்று ஆண்டுகள் மட்டும் இந்தியா அதன் உறுப்பினராக இடம்பெற வில்லை. மாறாக, 2006-07, 2008–10, 2012-14, 2015-17, 2019-21, 2022-24 என ஆறு முறை யுஎன்ஹெச்ஆர்சி உறுப்பினராக இந்தியா இருந்தது. யுஎன்ஹெச்ஆர்சி தொடங்கப்பட்ட 2006-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் இந்தியா அதிகபட்சமாக 190 உறுப்பினர்களில் 173 வாக்குக ளைப்பெற்று தேர்வானது.
   iv. தற்போது, ஏழாவது முறையாக இந்தியா மீண்டும் தேர்வாகியுள்ளது. இதுகுறித்து ஐ.நா. வுக்கான இந்திய தூதர் பர்வத னேனி ஹரீஷ் தனது சமூக ஊடக பக்கத்தில் வெளியிட்ட பதிவில், '2026–28 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு யுஎன்ஹெச்ஆர்சி உறுப்பினராக இந்தியா மீண்டும் தேர்வாகியுள்ளது. இது மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் இந்தியாவின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை பிரதிபலிப்பதாக உள்ளது.
   v. அங்கோலா, சிலி, ஈக்வடார், எகிப்து, எஸ்டோனியா, இராக், இத்தாலி, மோரீஷஸ், பாகிஸ்தான், ஸ்லோவேனியா, தென் ஆப்பிரிக்கா, பிரிட்டன், வியத்நாம் ஆகிய நாடுகளும் 2026 ஜனவரி 1-ஆம் தேதிமுதல் 3 ஆண்டுகளுக்கு யுஎன்ஹெச்ஆர்சி உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

8. மின்சார வாகனங்கள் மற்றும் பேட்டரிகளுக்கு இந்தியா மானியம் வழங்குவது தொடர்பாக உலக வர்த்தக அமைப்பில் (டபிள்யுடிஓ) சீனா புகார் அளித்துள்ளது.
   i. உள்நாட்டு மின்சார வாகனங்கள் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவிக்க, உற்பத்தி நிறுவனங்களுக்கு வரிச் சலுகை, மானியம் என திட்டங்களை மத்திய அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன் காரணமாக சீன நிறுவனங்களுக்கு கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், இந்தப் புகாரை அளித்துள்ளது.
   ii. இது குறித்து சீன வர்த்தக அமைச்சகம், 'உள்நாட்டு மின்சார வாகன உற்பத்தி நிறுவனங்களுக்கு இந்திய அரசு அறிவித்துள்ள இறக்குமதி குறைப்பு மானிய திட்டம், பலதரப்பு வர்த்தக விதிகளின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை உள்நாட்டு நிறு வனங்களுக்கு பலனளிக்கக் கூடியதாகவும், சீன நிறுவனங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.

அதனடிப்படையில் புகார் அளிக்கப்பட்டுள்ளது' என்று தெரிவித்துள்ளது.

iii. சீனா புகார் அளித்துள்ளதை உறுதிப்படுத்திய மத்திய வர்த்தக அமைச்சக மூத்த அதிகாரி, 'இதேபோன்ற புகாரை துருக்கி, கனடா, ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு எதிராகவும் டபிள்யுடிஓ-வில் சீனா சமர்ப்பித்துள்ளது. இந்தப் புகார் தொடர்பாக ஆலோசிக்க இந்தியாவுக்கு டபிள்யுடிஓ அழைப்பு விடுத்துள்ளது' என்றார்.

iv. இந்தியாவின் இரண்டாவது பெரிய வர்த்தகக் கூட்டாளியாக சீனா உள்ளது. சீனாவுக்கு இந்தியாவின் ஏற்றுமதி 2023-24-ஆம் ஆண்டில் ரூ.1.46 லட்சம் கோடி (16.66 பில்லியன் டாலர்) என்ற அளவில் இருந்த நிலையில், கடந்த நிதி யாண்டில் ரூ.1.25 லட்சம் கோடியாக இருந்தது. அதாவது 14.5 சதவீதம் சரிந்தது. அதேநேரம், சீனாவிலி ருந்து செய்யப்படும் இறக்குமதி மதிப்பு 11.52 சதவீதம் உயர்ந்தது.

9. கடந்த ஆகஸ்ட்மாதத்துடன் ஒப்பிடும் போது செப்டம்பர் மாதத்தில் ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதை 14 சதவீதம் அளவுக்கு இந்தியா குறைத்துள்ளதாக ஐரோப்பிய எரிபொருள் ஆய்வுமையம் வெளியிட்ட புள்ளிவிவரங்களில் தெரியவந்துள்ளது.

i. எனினும், ரஷியாவிடம் இருந்து அதிக கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகள் பட்டியலில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா தொடர்கிறது.

ii. கடந்த 2022 ரஷியா-உக்ரைன் போர் தொடங்கிய பிறகு, ஐரோப்பிய நாடுகள் பல ரஷியாவிடம் கச்சா எண்ணெய் கொள்முதலை நிறுத்தின. இதனால் ரஷியா சலுகை விலையில் கச்சா எண்ணெய் விற்பனை செய்ய முன்வந்ததால், அந்நாட்டிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் கொள்முதல் அதிக ரித்தது.

iii. இதையடுத்து, ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய்வாங் குவதற்காக இந்தியா அளிக் கும் நிதியை உக்ரைன் போரில் ரஷியா பயன்படுத்துகிறது. எனவே, இந்தியா மீது 25 சத வீதம் கூடுதல் வரி விதிப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார்.